செய்தி வெளியீடு எண்: 296 நாள்: 02.05.2018

**மகாத்மா காந்தி அவர்களின் 150—வது பிறந்த நாள் விழா குறித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரைகள்**

*******

**i)** ‘‘ஒவ்வொருவருக்கும் தேவையானது இவ்வுலகத்தில் உள்ளது. ஆனால், ஒவ்வொருவருடைய பேராசைக்கும் தேவையானது இவ்வுலகில் இல்லை’’ என மகாத்மா காந்தி அடிகள் கூறினார். அவரது இந்த போதனை தற்போதைய உலகிற்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. தற்போதுள்ள மனிதர்களின் தேவையற்ற நுகர்வுப் பழக்கமும், வீணாக்கும் பழக்கமும், உலகிலுள்ள குறைந்த அளவிலான வளங்களை மேலும் குறைத்துக் கொண்டே வருகின்றன. நிலையான வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமெனில், மகாத்மா காந்தி அடிகளின் நிலையான வளர்ச்சி குறித்த கொள்கைகளை சிறந்த முறையில் முன்னெடுக்கும் தனி நபர் அல்லது நிறுவனத்தினை கௌரவப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, **நோபல் பரிசினைப் போலவே, ‘காந்தி பசுமை புவி விருது’ (Gandhi Green Earth Award) என்ற விருது ஒன்றினை ஏற்படுத்தி, உலகளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட தனி நபர் அல்லது நிறுவனத்திற்கு வழங்கலாம்.**

**ii)** 1983 ஆம் வருடம் முதல் தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு, ஏழை எளிய மக்களுக்கு **விலையில்லா வேட்டி, சேலை கொடுக்கும் திட்டத்தினை மாண்புமிகு புரட்சித்**

**தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.** இத்திட்டம், தமிழ்நாடு அரசால் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. **அதே போல, அகில இந்திய அளவில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு கதர் வேட்டி மற்றும் சேலை வழங்கலாம்.**

iii) தமிழ்நாடு மக்கள் உயர் கல்வி பெற்று, வாழ்வில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் விதமாக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல அரசு கல்லூரிகளை துவக்கினார். அவர் வகுத்த பாதையில் செல்லும் விதமாக, காந்திகிராம கிராமீய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தை மத்திய பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தி, காந்திய சிந்தனை மற்றும் சிந்தாந்தம் குறித்த படிப்புகளுக்கு ஒரு உயர் மேம்பாட்டு மையத்தினை (Centre of Eminence) நிறுவ வேண்டும்.** இதற்கென 500 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்க வேண்டும்.

iv) 1959 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில், காந்தியடிகளின் பல பொக்கிஷங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளன. இவ்வருங்காட்சியகத்தை மேம்படுத்த வேண்டும்.

v) மகாத்மா காந்தியடிகளின் போதனைகளையும், செய்திகளையும் இளம் தலைமுறையினர் தெரிந்துகொள்ள

ஏதுவாக மாநகரங்களில் மகாத்மா காந்தியடிகள் குறித்த 'டிஜிட்டல்' அருங்காட்சியகங்களை ஏற்படுத்தலாம்.

vi) மகாத்மா காந்தியடிகளுடன் தொடர்புடைய இந்திய சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை (தண்டி யாத்திரை போன்ற) நாட்டின் பல்வேறு பகுதிகளில் இளைஞர்கள் தெரிந்துகொள்ளும் வகையில், மீண்டும் நிகழ்த்தி, பொதுமக்களின் நினைவுகளை புதுப்பிக்கலாம்.

vii) காந்தியடிகளை தொடர்பான குறும்படங்கள் மற்றும் பழைய படத் தொகுப்புகள் ஆகியவற்றை சமூக வலைதளங்கள், யூடியூப் (youtube), விமியோ (vimeo) போன்ற வலைப்பக்கங்களில் வெளியிடலாம், மற்றும் திரையரங்கங்களில் திரையிடலாம்.

viii) காந்தியடிகளின் போதனைகள் மற்றும் செய்திகள் குறித்த, மாவட்ட அளவிலான கட்டுரை எழுதுதல், பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, படம் வரைதல் மற்றும் விவாதம் போன்ற போட்டிகளை நடத்தி  காந்தி ஜெயந்தி அன்று பரிசுகளை வழங்கலாம்.

ix) பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் ஆண்டு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதுபோன்ற விழாக்களில் ஒரு பகுதியாக மகாத்மா காந்தியடிகளின் போதனைகளை மாணவ, மாணவியர் அறிந்துகொள்ளும் வகையில் இடம்பெறச் செய்யலாம். மேலும், மத்திய

மனிதவள மேம்பாட்டுத்துறை மூலம் இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் ‘காந்திய சிந்தனை குறித்த’ துறை ஒன்றினை ஏற்படுத்தலாம்.

x) அகிம்சை குறித்த மகாத்மா காந்தியடிகளின் போதனைகளை ஒரு வலைதளத்தில் இடம்பெறச் செய்து, அந்த இணையதளம் மூலம் ‘அகிம்சை உறுதிமொழி’ ஏற்கும் வசதியை மத்திய அரசு ஏற்பாடு செய்வதன் மூலம், இளம்தலைமுறையினர் ‘அகிம்சை உறுதிமொழி’ ஏற்கவும், அதனை தம் வாழ்வில் கடைபிடிப்பதையும் ஊக்குவிக்கலாம்.

xi) மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையினை மகாத்மா காந்தியடிகள் அறவே வெறுத்தார். இதனை முற்றிலும் வேரறுக்க தேவையான இயந்திரங்களை மத்திய அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வேண்டும்.

xii) மத்திய கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம் மூலம் ‘கதராடைகளை’ இளைய சமுதாயத்தினரும் உடுத்துவதை நவநாகரீகமாக கருதும் வகையில் மனமாற்றம் ஏற்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**